**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.110/2022
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : மலைச்சாமி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of April 2023.

17.04.2023

(எதிரி ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவரை நான் பார்த்துள்ளேன். கடந்த 11.10.2020 ம் தேதி இரவு 08.15 மணியளவில் கரிமூட்டத்தை தைத்து வைத்துவிட்டு சாப்பிடுவதற்காக கிளம்பிகொண்டிருந்தேன். எனக்கு முன்பாக கரிமூட்டம் முதலாளி ராஜ்குமார் சென்றுகொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி அவருக்கு எதிராக வந்து கத்திக்கம்பால் அசா.1 ராஜ்குமாரின் வயிற்றில் கிழித்துவிட்டார். அதில் அசா.1 க்கு காயம்பட்டு இரத்தம் வந்தது.

2) 108 ஆம்புலன்ஸ் மூலமாக அசா.1 ராஜ்குமாரை முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். நான் தான் கரிமூட்டத்தை பார்த்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் குமாரக்குறிச்சியை சேர்ந்தவன். அசா.1 சமத்துவபுரத்தை சார்ந்தவர். அசா.1 டம் தான் நான் கூலிக்கு வேலைக்கு செல்கிறேன் என்றால் சரிதான். 2, 3 வருடங்களா

வேலை பார்த்து வருகிறீர்களா என்றால் இல்லை சம்பவ சமயத்தில் 5 நாட்கள் வேலை பார்த்தேன். அசா.1 எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தார் என்றாலும், நான் பின்னால் நடந்து வந்துகொண்டிருந்தேன் என்றாலும் சரிதான். எனக்கு 10 அடி முன்பாகத்தான் அசா.1 நடந்து சென்றார்.

2) சம்பவம் நடந்த நேரம் இரவு 08.15 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் இருட்டான பகுதி என்று சொன்னால் சரிதான். சத்தம் கேட்ட பின்பு தான் நான் சென்று பார்த்தேன் என்று சொன்னால் சரிதான். நான் அசா.1ன் அருகில் சென்ற போது அங்கு யாரும் இல்லை என்றால் ஆஜர் எதிரி அங்கு தான் இருந்தார். எதிரி கையில் என்ன வைத்துக்கொண்டிருந்தார் என்றால் கத்திக்கம்பு வைத்துக்கொண்டிருந்தார். எதிரி தாக்க பயன்படுத்திய பொருட்களை காவல்நிலையத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை.

3) சம்பவத்தில் அசா.1 ராஜ்குமாருக்கு உடலில் இரத்தம் வந்ததா என்றால் வந்தது. சம்பவத்தில் அசா.1 அணிந்திருந்த சட்டை கிழிந்திருந்தது என்றால் சரிதான். அசா.1யை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு அசா.1டன் சென்றேனா என்றால் இல்லை கரிமூட்டம் வேலை இருந்ததால் நான் செல்லவில்லை. 5 நாட்கள் கழித்து அசா.1யை மருத்துவமனையில் வைத்து நான் பார்த்தேன்.

4) அசா.1யை மருத்துவமனையில் வைத்து நான் பார்த்தபோது அசா.1 என்னிடம் கூறிய விபத்தை தான் போலிசாரிடம் கூறினேன் என்றால் சரிதான், போலிசார் என்னை நான் கரிமூட்டம் வேலையில் இருக்கும்போதே வந்து விசாரித்து சென்று விட்டார்கள். அசா.1க்கும் எதிரிக்கும் இடையே உள்ள முன்பகை குறித்து எனக்கு தெரியுமா என்றால் நான் வெளியூர்காரர் எனக்கு தெரியாது. அசா.1 எனது முதலாளி என்பதால் அசா.1 தனது புகார் வாக்குமூலத்தில் ஏற்கெனவே எதிரிக்கும் அசா.1க்கும் முன்பகை இருப்பதாக கூறியிருப்பதாலும், அதற்கு ஆதரவாக அசா.1 சொல்லிக்கொடுத்தபடி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காமல் சம்பவ நேரத்தில் நான் கரிமூட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு அசா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.